புதன் கிழமை 1981 ஆகஸ்ட், 26.

ஆவணி 10, துன்மதி—திருவள்ளுவர் 2012

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

TAMIL NADU LEGISLATIVE ... 9 - JUN 1982 ... MADRAS

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்

நன்கு செலச்சொல்லா தார்.

நல்ல அறிஞர்கள் கூடியுள்ள அவையிலே, அவர்கள் உள்ளத்திலே நன்கு பதியும்படி, சிறந்த கருத்துக்களை எடுத்துச் சொல்ல இயலாதவர்கள் பல அரிய நூல்களைக் கற்றவர்களாக இருந்தாலும் உலகத்திற்குப் பயன் இல்லாதவரே ஆவர்.

1. பேரவைத் தலைவருக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு இன்று பிறந்த நாள் என்று தெரிகிறது. அவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு இன்று 56வது பிறந்தநாள் என்பதை அறிந்து இந்தப் பேரவை பெருமகிழ்ச்சி கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பிறந்த நாள் விழா நாளில் சட்டமன்றத்தில் வந்திருந்து, சட்டமன்ற உறுப்பினர்களோடு சேர்ந்து கடமையாற்ற முன் வந்த தங்களை இப்பேரவை உறுப்பினர்கள் மிகமிகப் பாராட்டுகிறார்கள். தாங்கள் வளம் பல பெற்று நலம் பல எய்தி பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டும் என்று இந்த அவையின் சார்பாக தங்களை வாழ்த்துகிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தங்களுடைய 56வது பிறந்த நாளைக் கொண்டாடுகிற இந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எங்களுடைய நல்லெண்ணத்தை வெளிப்படுத்துகிற அடிப்படையில், தாங்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டும் என்று வாழ்த்துகிற வயது எனக்கு இல்லாவிட்டாலும், நீங்கள் நலம் பல பெற்று நல்ல முறையில் செயல்படவிழைகிறேன் என்பதை மட்டும் சொல்லி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் அதை அறிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன் என்றும் சொல்லி அமைகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த நல்ல நாளிலே, தங்கள் இன்னும் பல ஆண்டுக்காலம் வாழ்ந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கும், தமிழகத்திற்கும், நாட்டிற்கும் இன்னும் உயரிய பல சேவைகளை ஆற்ற வேண்டும் என்று காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே வாழ்த்துகிறேன். வாழ்க பல்லாண்டு.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இன்று தங்களுடைய பிறந்த நாள் என்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். நம் அவை முன்னவர் சொல்லியிருக்கக் கூடிய அத்தனை சிறப்பு உணர்வுகளோடும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கலந்து கொள்கிறது. கட்சியின் சார்பாக மட்டும் அல்லாமல், சொந்த சார்பிலேயும் வாழ்த்துகிறேன். நீண்டகாலமாக உங்களோடு பழகியிருக்கிறேன். நாடாளுமன்றத்திலும் சரி சட்டமன்றத்திலும் சரி உங்களோடு நெருங்கிப் பழகியிருக்கிறேன். நிச்சயமாக நீங்கள் நெடுநாள் வாழ வேண்டும் என்பது மட்டும் அல்லாமல், பலர் சொன்னார்கள், நீங்கள் இந்த அவையை நடத்திக் கொண்டேயிருக்க வேண்டும் என்று. அது தங்களை அமைச்சராவதை தடுத்து விடும் என்பதால் நீண்ட நாட்கள் தமிழகத்திற்குச் சேவை செய்ய வேண்டும் என்று வாழ்த்துகிறேன். அமைச்சராவது முதலமைச்சர் கையில் இருக்கும் விஷயம். நான் அதனால் அதற்குள்ளேயெல்லாம் போகவில்லை. ஆகவே, உங்களுக்கு நான் என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களிடம் ஒரு பொறாமை எனக்கு உண்டு. என்னைவிட நீங்கள் வயதில் சிறியவராக இருக்கிறீர்களே என்று தான், வேறு ஒன்றும் இல்லை.

திரு. இரா. கருப்பையா: பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய பிறந்தநாள் இன்றையதினம் என்பதை அறிந்து நாங்கள் எல்லாம் மகிழ்ச்சியடைகிறோம். நீங்கள் பல்லாண்டு வாழ்ந்து நம்முடைய தமிழகத்திற்கு நல்ல சேவை செய்து வாழ வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வாழ்த்தி அமர்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தந்தை மகற்குச் செய்கிற மிகப்பெரிய கடமை அவையிலே முந்தியிருக்கச் செயல். ஆனால் உங்களுடைய தந்தையாரோ தங்களை அவைக்கு நாயகனாகவே ஆக்கி, பெரும்பேற்றை பெற்றிருக்கிறார் என்று பாராட்டி நாங்கள் எல்லாம் எப்போதும் எண்ணிப் பார்க்கிற அளவிற்குத் தாங்கள் எப்போதும் எளிமையானவர், இனிமையானவர். ஆகவே, சபாநாயகர் திரு. க. இராசாராம் அவர்களுக்கு பிறந்தநாள் என்று சொல்வதை விட, இனிமைக்கும் எளிமைக்கும் பிறந்தநாள். எல்லோரையும் ஒன்றாகக் கருதி, அன்போடு பழகுகிற அந்தப் பண்புக்கு பிறந்த நாள் என்றுதான் சொல்லவேண்டும். அப்படி பண்புக்குப் பிறந்த நாள் என்று சொல்கிற நேரத்திலே இது நாளிலே எல்லாம் சிறந்த நாளாகத் தோன்றுகிறது. நீங்கள் பல்லாண்டு வாழ்வாங்கு வாழ்ந்து நலம்பெறவேண்டும் என்று, தாங்கள் அவையின் தலைவராக இருந்தாலும் அல்லது வேறு எந்தப் பதவியில் இருந்தாலும் உங்களை வாழ்த்துவோம் என்று எங்கள் காந்தி—காமராஜ் தேசிய காங்கிரஸின் சார்பிலே வாழ்த்தி, அமர்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களது பிறந்த நாள் விழாவை இந்த மன்றத்திலேயே கொண்டாடுகிற அளவிற்கு இந்தச் சூழ்நிலையில் அகில இந்திய பார்வேர்ட் ப்ளாக் கட்சி சார்பாகத் தாங்கள் நீடு வாழ்க வேண்டும் என்று வாழ்த்துவதோடு இந்த நாட்டுக்கும் குறிப்பாக ஐந்து கோடி தமிழ் மக்களுக்கும் தங்களுடைய சேவை நீடிக்க வேண்டும் என்று அதற்காகத் தாங்கள் பல்லாண்டு வாழ வேண்டுமென்று அகில இந்திய பார்வேர்ட் ப்ளாக் கட்சி சார்பாக வாழ்க வாழ்க என்று வாழ்த்தி அமர்கிறேன்.

திரு. க. பாரமலை; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய பிறந்தநாளில் தங்களுடைய சேவை சிறக்க வேண்டுமென்றும் தாங்கள் பொது வாழ்வில் இன்னும் சிறப்பான இடங்களைப் பெற்று நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் தங்களது சேவை தொடர நீங்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டும் என்றும் சொல்லி எல்லாம் வல்ல அன்னை மீனாட்சியை இறைஞ்சி, தாங்கள் பல்லாண்டு வாழ தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சி சார்பாக எனது வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தங்களது பிறந்த நாள் விழாவினை இந்த மன்றத்தில் இருக்கிற எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து கொண்டாடுகிற இந்தப் பேற்றினைப்பெற்றமைக்குக் குடியரசு கட்சி சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பிறந்த நாள் விழாவில் நாங்கள் எல்லாம் தங்களை வாழ்த்துகிற வயதைப் பெறவில்லையென்றாலும் எங்கள் கட்சி சார்பாகத் தங்களுக்கு எங்களது அன்பார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு இன்றுபோல் என்றும் தாங்கள் எங்களுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும் என்று வேண்டி அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய பிறந்த நாள் இன்று என்று தமிழகத்திற்கு அறிவிக்கிற நேரத்தில் சட்டமன்றத்தின் வாயிலாகச் சொல்லும்போது அதற்கு எவ்வளவு தகுதியும் உயர்வும் வருகிறது என்பதை நாம் அனைவரும் உணர்கிறோம். உங்களை வாழ்த்த எனக்கு வயது இருக்கிறது என்பதில் பெருமைப்படுகிறேன். நான் பொறாமைப்படவில்லை. (சிரிப்பு) ஒரு வகையில் நீங்கள் அனைவருக்கும் நல்லவராக இருக்கிறீர்கள் என்பது இந்த நாட்டில் நல்ல எடுத்துக்காட்டுக்கு உதாரணமாக அமைந்திருக்கிறது என்பதை நான் மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்கள் எப்போதுமே கட்சிக்கு அப்பாற்பட்டு இயங்க வேண்டும் என்பதற்காகத்தான் பேரவைத் தலைவர் பொறுப்பை ஏற்றதுமே அந்தக் கட்சியிலிருந்து விலகுகிறேன் என்று சொல்வதோடு, விலகி இருப்பதாக மற்றவர்கள் எண்ணிக்கொள்கிற அளவிற்குச் செயல்படுவதை மரபாகக் கொண்டிருக்கிறோம். இந்த வகையில் உங்களைப் பார்க்கும்போது நீங்கள் முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக இருக்கிறீர்கள், என்பதை எண்ணி நாங்கள் மகிழ்வதோடு எங்களுடைய அமைச்சரவை சார்பாகவும், கட்சியின் சார்பாக

சொல்லக் கூடாது என்றாலும் கட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் அதையும் சேர்த்து இணைத்து உங்களுக்கு வாழ்த்துக்கள் சொல்லி நீங்கள் பல்லாண்டு வாழ்ந்து நலத்தோடு இந்தப் பேரவையில் உள்ள எல்லோருடைய அரவணைப்போடும் புகழ் பெறவேண்டுமென்றும் வாழ்த்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழக முதல்வர் அவர்களுக்கும், எல்லக் கட்சித் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மிகப் பெரியதொரு பெருமையை எனக்கு இந்தப் பேரவை அளித்ததற்காக எனது நன்றியை மீண்டும் மீண்டும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் ஏதாவது செய்திருப்பேனானால் அது பேரறிஞர் அண்ணா அவர்களிடம் நான் கற்ற பாடம் என்பதேயல்லாமல் வேறு அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இளமையில் பெரியார் அவர்களிடம் பண்பையும், அடக்க உணர்ச்சியை பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலும் ஓரளவு கற்றுக் கொண்டிருக்கிறேன். அது நான் என்னை இந்தளவிற்கு உயர்த்தியிருப்பதாகக் கருதுகிறேன். ஆகவே உங்கள் வாழ்த்துக்களை அவ்விருவருடைய திருப்பாதங்களிலும் நான் சமர்ப்பித்துக் கொள்வதோடு நீங்கள் காட்டிய அன்புக்கு என்னுடைய நன்றியை மீண்டும் கூறி அமர்கிறேன். வணக்கம்.

2. வினாக்கள் — விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

இராமேஸ்வரம் துப்பாக்கி சூட்டில் மரணமடைந்தோர் குடும்பத்திற்கான நிதி உதவி.

*வினா எண் 61—திரு கே. தனுக்கோடித் தேவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 4–7–1979 ஆம் தேதி இராமேஸ்வரத்தில் துப்பாக்கிச் சூட்டில் இறந்த மீனவர் குடும்பத்திற்குப் பொருளாதார உதவி செய்யும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன?

மாண்புமிகு திரு. எம் ஜி. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) 4–7–79 அன்று இராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தில் நடைபெற்ற போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் மரணமடைந்த நால்வரில், மூவரின் குடும்பங்களுக்கு முதல் அமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மற்றொருவரின் வருவாயை நம்பி வாழும் வாரிசு யாரும் இல்லாததால் இறந்த நான்காவது நபருக்காக நிதியுதவி அளிக்கப்படவில்லை.

[முற்பகல் 9-10]

திரு. கே. தனுக்கோடித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரத்தில் துப்பாக்கிச் சூட்டில் இறந்த மீனவர்கள் குடும்பங்களுக்கு முதல்வர் அவர்கள் நிதியி